**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No. 594/2022 | Date | : | 10.07.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா**.1 | Taluk | : | |
| Name | : | **பிரபாகரி** | Calling | : | |
| Father Name | : | **சுகிஷேச முத்து** | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.07.2026

( எதிரி ஆஜர் இல்லை. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரியின் சார்பில் BNSS பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஈரோடு நசியனூரில் கதவு எண் மூன்றில் குடியிருந்து ராயபாளையம் புதூரில் உள்ள அங்கன்வாடியில் சத்துணவு டீச்சராக வேலை செய்து வருகிறேன் கடந்த 08.10.2020 ஆம் தேதி மதியம் 03.00 மணி அளவில் நான் வேலைக்கு சென்று விட்டு வீடு திரும்பினேன். அப்போது என்னுடைய கணவர் மது அருந்திவிட்டு என்னை வீட்டில் இருந்து வெளியே வரும்படி சத்தம் போட்டார். பின்பு நான் வெளியே வராததால் அவரே வீட்டிற்குள் நுழைந்து என்னை வெளியே இழுத்து வந்து அங்கிருந்த இரும்பு கம்பி ஒன்றை எடுத்து எனது வலது தோள்பட்டையிலும் தலையிலும் அடித்தார். அதனைப் பார்த்த என்னுடைய தாயார் உடனே வந்து என் மகளை அடிக்காதே என்று அந்த கம்பியை பிடித்தார். அதில் அவருக்கு கையில் சிறிய காயம் ஏற்பட்டது.

2. பின்பு அங்கு இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து என்னை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்பு எனது கணவர் ராஜா மீது நடவடிக்கை எடுக்குமாறு நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். தற்போது

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.10 17:16:24 +0530

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

1. எனக்கும் எனது கணவர் ராஜாவிற்கும் முறைப்படி திருமணம் நடைபெறவில்லை என்றால் சரிதான். எனக்கும் எனது கணவருக்கும் சுமார் 20 வயது வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் பழகி வந்தது எதிரியின் குடும்பத்திற்கு பிடிக்கவில்லை என்றால் சரிதான். அதனால் எங்கள் இரு குடும்பத்திற்கும் அடிக்கடி சண்டை ஏற்படும் என்றும் அவ்வாறு எதிரியின் அண்ணன் மீது நான் சித்தோடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். எங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு பிரிந்த நிலையில் அவரிடம் நான் நஷ்ட ஈடு கேட்டேன் என்றால் இல்லை.

2. புகார் கொடுத்தபோது காவல் நிலையத்தில் வைத்து எதிரியிடம் நஷ்ட ஈடு கேட்டேன் என்றால் இல்லை. எதிரியிடம் முறைப்படி திருமணம் செய்ய கூறி அடிக்கடி நான் சண்டை போட்டேன் என்றால் இல்லை. இரும்பு கம்பியால் எதிரி தாக்கியதாக கூறிய நிலையில் அப்போது எனக்கு ரத்த காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல ரத்தக்காயம் ஏற்பட்டது. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் அவ்வாறு சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி அரசு ஊழியராக பணிபுரிவதால் அவரிடமிருந்து இழப்பீடு பெறுவதற்காக பொய் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.07.10 17:16:34 +0530

Judicial Magistrate No.III,

Erode.